முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்
அ.வ.எண். 235/2012

வா.சா. 2 ரவி
பக்கம் 2
21.10.2024

**3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் வாதி தான் என்னை நீதிமன்றத்திற்கு சாட்சி அளிக்க அழைத்து வந்தார். இவ்வழக்கு நடைபெற்று வந்த காலத்தில் நான் ஒவ்வொரு வாய்தாவிற்கும் தவறாமல் வந்துள்ளேன்.வாதிகள் இருவரும் எனக்கு உறவினர்கள் அல்ல தெரிந்தவர்கள் தான்.ஒன்னு மட்டும் இரண்டு பிரதிவாதிகள் தாவா சொத்தை எந்த தேதி மாதம் வருடத்தில் கிரைய பெற்றார்கள் என்ற விபரம் எனக்கு நினைவில்லை. தாவா சொத்து குன்றத்தூர் தேவேந்திர நகர் 35/2 ல் அமைந்துள்ளதுஒன்னு மட்டும் இரண்டு பிரதிவாதிகள் மூன்று பிரதிவாதிக்கு 2004 ஆம் ஆண்டு பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தனர்.மூன்றாம் பிரதிவாதி நான்காம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. 31 7 2006 அன்று ஒன்று மற்றும் இரண்டு பிரதிவாதிகள் மூன்றாம் பிரதிவாதியின் பெயரில் இருந்த பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்து விட்டனர். அதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் நான்காம் பிரதிபாதிக்கு மூன்றாம் பிரதிவாதி தாவா சொத்துக்களை கிரையம் ஏற்படுத்திக் விபரம் எனக்கு அதற்கு பின்னிட்டு தான் தெரியவந்தது. 30.7. 2006 வரை மூன்றாம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பொது அதிகார பத்திரம் நிலுவையில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் நிலுவையில் இருக்கும் பொழுது தான் 27.7.2006 அன்று மூன்றாம் பிரதிவாதி நான்காம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் ஏற்படுத்திக் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான்.

மூன்றாம் பிரதிவாதி ஒன்று மற்றும் இரண்டு பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து தொடர்பாக எந்த ஒரு கணக்கையும் ஒப்படைக்கவில்லை. இவ்வுலகில் ஒன்று மட்டும் இரண்டு பிரதிவாதிகள் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்ட அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது. ஒன்னு மட்டும் இரண்டு பிரதிவாதிகள் இவ்வுலகில் ஆஜராகாததற்கு காரணம் அவர்களிடம் மூன்றாம் பிரதிவாதி கணக்கு வழக்குகளை ஒப்படைத்த காரணத்தினால் என்றும் அவர்கள் ஆஜரானால் அது குறித்த விபரம் வெளியே தெரிய வந்துவிடும் என்ற காரணத்தினால் தான் அவர்கள் இவ்வுலகில் தோன்றாதரப்பினர்களாக உள்ளனர் என்றால் சரியல்ல. வாதிகளின் படிப்பு செலவிற்காக வேண்டி தான் ஒண்ணும் மற்றும் இரண்டு பிரதிவாதிகள் மூன்றாம் பிரதிவாதிக்கு பெயரில் பொது அதிகார பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. இன்றைய நாள் வரை நான்காம் பிரதிவாதியின் வசத்தில் தான் தவா சொத்து அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.வாதிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இவ்வழக்கில் நான் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**Sd/-K.S. Arun Sabhapath,**

**Principal Sub Judge,Kancheepuram.**